22381

OL/2016/61/T-I, II (NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි ] முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

61 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

| | |
|---|---|
| භූගෝල විද්‍යාව I, II | පැය තුනයි |
| புவியியல் I, II | மூன்று மணித்தியாலம் |
| Geography I, II | Three hours |

சுட்டெண் : ..............................

## புவியியல் I

※ இவ்வினாத்தாள் **40** வினாக்களைக் கொண்டுள்ளது.
※ ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

● **1** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து, **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**1.** சேர்க்கையின் அடிப்படையில் புவித் தொகுதியில் காணப்படும் உப தொகுதிகளின் எண்ணிக்கை........................................ ஆகும்.
(இரண்டு / மூன்று / நான்கு)

**2.** புவி ஓடானது மூடியிலிருந்து ...................................... தொடர்ச்சியின்மையினால் பிரிக்கப்படுகின்றது.
(கூற்றன்பேர்க் / மோகோறோவிசிக் / லேமன்)

**3.** புவியிலுள்ள வளங்களுள் ........................................ என்பது உயிரின வளங்களின் பிரிவைச் சேர்ந்ததாகும்.
(மண் / நீர் / காடுகள்)

**4.** உலகின் மிக உயரத்தில் அமைந்துள்ள மேட்டுநிலம் ........................................ மேட்டுநிலமாகும்.
(பாமீர் / திபெத்தியன் / மொங்கோலியன்)

**5.** ஏரியிலிருந்து உற்பத்தியாகும் ஓர் ஆறு........................................ஆகும்.
(தேம்ஸ் / றைன் / நைல்)

**6.** செம்பூரான் மண் (Laterite soil) ................................ பயிர்ச்செய்கைக்குத் தேவையான சாதகமான காரணியாகும்.
(தெங்கு / இறப்பர் / தேயிலை)

**7.** தொலமைற்றுப் பாறை ........................................ மாவட்டத்தில் பரந்தளவில் பரம்பிக் காணப்படுகிறது.
(நுவரெலியா / யாழ்ப்பாணம் / மாத்தளை)

**8.** இலங்கையில் சக்தியை பிறப்பாக்கம் செய்வதற்காக பரந்தளவில் பயன்படுத்தப்படும் சக்திமூலம் ........................................ஆகும்.
(நீர் / பெற்றோலியம் / உயிர்த்திணிவு)

**9.** உலகில் பிரதான குடித்தொகைச் செறிவு கொண்ட பிரதேசமாகக் கருதப்படுவது........................................ஆகும்.
(கிழக்கு ஆசியா / மத்திய அவுஸ்திரேலியா / கிழக்கு ஐரோப்பா)

**10.** இலங்கையில் பயன்படுத்தப்படும் 1:50 000 இடவிளக்கப் படமானது 92 படத்தாள்களாகப் பிரிக்கப்பட்டு அச்சுப் பதிப்பு செய்யப்பட்டுள்ளது. அத்தாள்களுள் ஒன்றினால் உள்ளடக்கப்படும் நிலப்பகுதி ........................................ சதுரக் கிலோமீற்றராகும்.
(1 000 / 10 000 / 50 000)

[பக். 2 ஐப் பார்க்க

- **11** தொடக்கம் **15** வரை தரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து, அவை சரியாயின் '**ச**' யையும் பிழையாயின் '**பி**' யையும் சுற்றி வட்டம் வரைக.

**11.** ரன்னா, தங்காலை, மித்தெனியா ஆகியவற்றினை இணைத்துக் காணப்படும் தெங்குப் பயிர்ச்செய்கைப் பகுதியானது சிறிய தெங்கு முக்கோணம் என அறியப்படும். **ச / பி**

**12.** உயரத்துக்கேற்ப வெப்பநிலை அதிகரித்துச் செல்வது மாறன் மண்டலத்தின் முனைப்பான பண்பாகும். **ச / பி**

**13.** இலங்கையின் மொத்த தொழிற்படையில் மிக உயர்ந்த சதவீதம் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளது. **ச / பி**

**14.** உலகின் மொத்தக் குடித்தொகையில் 76% ஆசியா மற்றும் ஆபிரிக்கா ஆகிய இரண்டு கண்டங்களில் காணப்படுகின்றது. **ச / பி**

**15.** கருங்கடல் முற்றாக நிலத்தினால் சூழப்பட்டுள்ள கடலாகும். **ச / பி**

- **16** தொடக்கம் **20** வரையுள்ள வினாக்களுக்கு '**அ**' மற்றும் '**ஆ**' என இரண்டு நிரல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிரலில் உள்ளவற்றை அவற்றின் தொடர்புகளின் அடிப்படையில் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையினது **இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**16.** புவி வளிமண்டலத்தின் பிரதான படைகள் சில '**அ**' நிரலின் கீழ் தரப்பட்டுள்ளன. வளிமண்டலப் படைகளின் மேலெல்லையின் உயரங்கள் '**ஆ**' நிரலில் காட்டப்படுகின்றன. '**அ**' நிரலிலுள்ள ஒழுங்குடன் '**ஆ**' நிரலைப் பொருத்திப் பார்க்கும் பொழுது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. மாறன் மண்டலம் | A - 50 km |
| 2. இடை மண்டலம் | B - 20 km |
| 3. படை மண்டலம் | C - 120 km |
| | D - 80 km |

(1) A, C, B (2) B, D, A (3) C, D, A (4) D, B, C (.........)

**17.** இலங்கையில் மின்சாரத்தினை உற்பத்தி செய்யும் சில சக்தி மூலங்கள் '**அ**' நிரலின் கீழ் தரப்பட்டுள்ளன. இலங்கையில் சக்தி வலு நிலையங்கள் அமைவுபெற்றுள்ள சில இடங்கள் '**ஆ**' நிரலின் கீழ் தரப்பட்டுள்ளன. '**அ**' நிரலிலுள்ள ஒழுங்குடன் '**ஆ**' நிரலைப் பொருத்திப் பார்க்கும் பொழுது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. காற்றுச் சக்தி | A - புத்தளம் |
| 2. வெப்ப சக்தி | B - கொத்மலை |
| 3. சூரிய சக்தி | C - பருத்கந்த |
| | D - கெரவலப்பிட்டிய |

(1) A, B, C (2) B, C, D (3) D, A, C (4) A, D, C (.........)

**18.** உலகின் சில இயற்கை அனர்த்தங்கள் '**அ**' நிரலின் கீழ் தரப்பட்டுள்ளன. இயற்கை அனர்த்தங்களினுள் அடிக்கடி எளிதில் பாதிக்கப்படக் கூடிய பகுதிகள் '**ஆ**' நிரலில் தரப்பட்டுள்ளன. '**அ**' நிரலிலுள்ள ஒழுங்குடன் '**ஆ**' நிரலைப் பொருத்திப் பார்க்கும் பொழுது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. வரட்சி | A - இந்தோனேசியா |
| 2. சூறாவளி | B - மத்திய அத்திலாந்திக் சமுத்திரப் பகுதி |
| 3. காட்டுத் தீ | C - வங்காள விரிகுடா |
| | D - மத்திய ஆபிரிக்க சாகேல் பிரதேசம் |

(1) A, B, C (2) D, B, C (3) D, A, B (4) D, C, A (.........)

**19.** இலங்கையில் பின்பற்றப்பட்டு வரும் சில பொருளாதார நடவடிக்கைகள் '**அ**' நிரலின் கீழ் தரப்பட்டுள்ளன. பொருளாதார நடவடிக்கைகள் பரம்பிக் காணப்படும் சில பகுதிகள் '**ஆ**' நிரலில் காட்டப்படுகின்றன. '**அ**' நிரலிலுள்ள ஒழுங்குடன் '**ஆ**' நிரலைப் பொருத்திப் பார்க்கும் பொழுது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. உவர்நீர் மீன்பிடி நடவடிக்கைகள் | A - அம்பேவல |
| 2. சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை | B - நீர்கொழும்பு |
| 3. பாற்பண்ணை | C - மாத்தளை |
| | D - கண்டி |

(1) B, C, A (2) A, B, C (3) B, D, C (4) C, B, A (.........)

**20.** உலகில் இரும்பு மற்றும் உருக்கினை உற்பத்தி செய்யும் சில முன்னணி நாடுகள் '**அ**' நிரலில் தரப்பட்டுள்ளன. இரும்பு மற்றும் உருக்கினை உற்பத்தி செய்யும் பல பிரதேசங்கள் '**ஆ**' நிரலில் தரப்பட்டுள்ளன. '**அ**' நிரலிலுள்ள ஒழுங்குடன் '**ஆ**' நிரலைப் பொருத்திப் பார்க்கும் பொழுது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. சீனா | A - குஸ்நெட்ஸ் பிரதேசம் |
| 2. ஐக்கிய இராச்சியம் | B - மஞ்சூரியப் பிரதேசம் |
| 3. ரஷ்யா | C - பேர்மிங்காம் பிரதேசம் |
| | D - கிளாஸ்கோ பிரதேசம் |

(1) A, D, B (2) B, C, D (3) D, A, C (4) B, C, A (.........)

[பக். 3 ஐப் பார்க்க

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

**21.** புவியின் கற்கோளமானது ஒன்றுடனொன்று தொடர்புபட்ட வகையில் மிகவும் மெதுவாக நகரும் பல்வேறு ........................................ கொண்டமைந்துள்ளது.

**22.** $23\frac{1}{2}^{\circ}$ தென் அகலக்கோடு ........................................ என அறியப்படும்.

**23.** இலங்கையில் அகழ்ந்தெடுக்கப்படும் காரீயமானது படையமைப்பிலானது மற்றும் ........................................ என வகைப்படுத்தப்படுகின்றது.


**24.** படங்களின் பாகுபாட்டின்படி, ஒரு குறிப்பிட்ட விடயத்தினைக் காட்டுவதற்கு மட்டும் வரையப்படும் படங்கள் ............................ படங்கள் என அழைக்கப்படும்.

**25.** சர்வதேச கடல் சட்டத்தின்படி, இலங்கையின் 'ஆள்புலக் கடல் எல்லையானது' கரையோரக் கோட்டிலிருந்து ........................................ கடல் மைல் வரையுள்ள வலயமாகக் கருதப்படும்.


- தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைப் பயன்படுத்தி **26** ஆம், **27** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

**26.** கல்லோயா சேனாநாயக்க சமுத்திரம் அமைந்துள்ள மாவட்டத்தினை ..............என்னும் எழுத்து காட்டுகின்றது.

**27.** இலங்கையில் தேயிலை பயிரிடப்படும் பகுதிகளில், 'நடுத்தர மலைநாட்டுத் தேயிலை' வளரும் மாவட்டம் ஒன்று .............. என்னும் எழுத்தினால் காட்டப்படுகின்றது.




- 2015 ஆம் ஆண்டில் இலங்கையின் இறக்குமதி மூலங்கள் வரைபொன்றில் தரப்படுகின்றது. அதனை நன்கு பரிசீலித்து **28** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




(மூலம் : இலங்கை மத்திய வங்கி அறிக்கை - 2015)

**28.** வரைபின்படி, 2015 ஆம் ஆண்டில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவான பொருட்கள் ........................................நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டன.

**29.** 2015 ஆம் ஆண்டில் இலங்கைக்கு மிகக் குறைந்தளவான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட நாடு ........................................ஆகும்.

**30.** 2015 ஆம் ஆண்டில் இலங்கையின் இறக்குமதி மூலங்களைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மேற்படி வரைபு முறையானது ........................................ என அறியப்படும்.

[பக். 4 ஐப் பார்க்க

- **31** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் **இலக்கத்தினை** எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**31.** வானவெளியிலிருந்து புவிக்கு வரும் பெரும்பாலான ஆகாயக் கற்கள் எரிந்து அழிந்து விடுவது
(1) மாறன் மண்டலத்திலாகும். (2) படை மண்டலத்திலாகும்.
(3) வெப்ப மண்டலத்திலாகும். (4) இடை மண்டலத்திலாகும். (.........)

**32.** கண்ட ஓடு கொண்டிருப்பது,
(1) சிலிக்கேற்றுக்கள் (2) எரிமலைக் குழம்புப்பாறைகள்
(3) கருங்கற் பாறைகள் (4) மக்னீசியம் (.........)

**33.** பின்வரும் கூற்றுக்களுள் உயிர்க்கோளம் பற்றிய **பிழையான** கூற்றினைத் தெரிவு செய்க.
(1) உயிர்க் கோளம் என்பது முழு உயிர்ச்சூழலையும் குறிப்பதுடன் எல்லாக் காலங்களிலும் இடைவிடாது தொழிற்படுகின்றது.
(2) ஒளித்தொகுப்புச் செயன்முறையானது உயிர்க்கோளத்திற்குள் இடம் பெறுகின்றது.
(3) உயிர்க் கோளத்தில் தாவரம் மற்றும் விலங்கின வாழ்வுக்கிடையில் ஓர் இடைத்தொடர்பு காணப்படுகின்றது.
(4) கற்கோளத்தினையும், நீர்க்கோளத்தின் பகுதிகளையும் மொத்தமாக உயிர்க்கோளம் கொண்டிருக்கின்றது. (.........)

**34.** 'அயன வலயம்' என அறியப்படுவது
(1) மத்திய கோட்டிற்கும் கடகக்கோட்டிற்கும் இடைப்பட்ட வலயமாகும்.
(2) கடகக் கோட்டிற்கும் மகரக் கோட்டிற்கும் இடைப்பட்ட வலயமாகும்.
(3) மகரக் கோட்டிற்கும் அந்தாட்டிக் வட்டத்திற்கும் இடைப்பட்ட வலயமாகும்.
(4) மத்திய கோட்டிற்கும் மகரக்கோட்டிற்கும் இடைப்பட்ட வலயமாகும். (.........)

- கீழே தரப்படும் தகவல்களைப் பயன்படுத்தி **35** மற்றும் **36** ஆம் வினாக்களுக்கான விடையைத் தருக.

A - ஓசோன் படையின் தேய்வு
B - மண் அரிப்பு
C - புவிமேற்பரப்பினை வந்தடையும் மோசமான ஞாயிற்றுக் கதிர்கள்
D - விவசாய விளைச்சல்
E - வளிமண்டல வெப்பநிலை

**35.** ஒரு காரணியில் ஏற்படும் அதிகரிப்பினால் மற்றைய காரணியில் ஏற்படும் வீழ்ச்சியைக் குறித்துக் காட்டும் இரண்டு விடயங்களைக் கொண்டிருக்கும் விடையானது
(1) A மற்றும் C ஆகும். (2) A மற்றும் D ஆகும்.
(3) C மற்றும் E ஆகும். (4) B மற்றும் D ஆகும். (.........)

**36.** ஒரு காரணியில் ஏற்படும் அதிகரிப்பினால் மற்றைய காரணியில் ஏற்படும் அதிகரிப்பினைக் குறித்துக் காட்டும் இரண்டு விடயங்களைக் கொண்டிருக்கும் விடையானது
(1) A மற்றும் C ஆகும். (2) C மற்றும் E ஆகும்.
(3) A மற்றும் E ஆகும். (4) B மற்றும் D ஆகும். (.........)

**37.** மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணின்படி (HDI) உலக நாடுகளை பிரிக்கக்கூடிய பிரிவுகளின் எண்ணிக்கை
(1) 2 ஆகும். (2) 3 ஆகும். (3) 4 ஆகும். (4) 5 ஆகும். (.........)

**38.** பின்வருவனவற்றுள் எது, மானிட நடவடிக்கைகளினால் தூண்டப்படுகின்ற இயற்கை இடராகக் கருதப்படுகின்றது?
(1) புவிநடுக்கங்கள் (2) எரிமலை வெடிப்புகள்
(3) சுனாமி (4) நிலச்சரிவுகள் (.........)

**39.** ரத்தோட்டை, மீட்டியாகொட மற்றும் பொரலஸ்கமுவ போன்ற பகுதிகளில் பரம்பிக் காணப்படும் கனியமானது
(1) காரீயம் ஆகும். (2) சுண்ணாம்புக்கல் ஆகும்.
(3) வெண்களி ஆகும். (4) இரத்தினக்கற்கள் ஆகும். (.........)

**40.** இலங்கையில் நிலச்சரிவுகள் அடிக்கடி நிகழும் இரண்டு மாவட்ட சோடிகளைத் தெரிவு செய்க.
(1) கேகாலை, நுவரெலியா (2) மாத்தளை, குருநாகல்
(3) கண்டி, மொனராகலை (4) பதுளை, கம்பஹா (.........)

* *

[பக். 5 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

61 | T | I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

භූගෝල විද්‍යාව I, II
புவியியல் I, II
Geography I, II

## புவியியல் II

- ※ இவ்வினாத்தாள் **I, II** என்னும் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
- ※ பகுதி **I** இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- ※ பகுதி **II** இலிருந்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.
- ※ எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

### பகுதி I

**1.** (அ) 1:50 000 அளவுதிட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தினைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் (பக்கம் 8) பயன்படுத்துக.

இல. (i) தொடக்கம் (iv) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) இல. ① இனால் காட்டப்படுவது என்ன?
(பாதுகாக்கப்பட்ட காட்டு எல்லை / பாறை / கற்குழி) (01 புள்ளி)

(ii) இல. ② இனால் காட்டப்படுவது என்ன?
(காடு / பற்றைக் காடு / சேனை) (01 புள்ளி)

(iii) இல. ③ இனால் காட்டப்படுவது என்ன?
(பௌத்த கோயில் / வரலாற்று முக்கியத்துவம்மிக்க இடம் / வாடி வீடு) (01 புள்ளி)

(iv) இல. ④ இனால் குறித்துக் காட்டப்படும் நிர்வாக எல்லை யாது?
(மாவட்ட எல்லை / மாகாண எல்லை / பிரதேச செயலகப்பிரிவு எல்லை) (01 புள்ளி)


(v) **A** என்ற எழுத்தினால் காட்டப்படும் சதுரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பகுதியில், குறியீடுகளினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள, மக்களுக்குப் பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றினைப் பெயரிடுக. (01 புள்ளி)

(vi) படப் பகுதி பற்றிய மூன்று கூற்றுக்கள் (a), (b), (c) ஆகியவற்றின் கீழ் தரப்பட்டுள்ளன. அந்த ஒவ்வொரு கூற்றினையும் வாசித்து, சரியாயின் 'ச' எனவும் பிழையாயின் 'பி' எனவும் விடைத்தாளில் அதற்கெனத் தரப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(a) படப் பகுதியில் பல்வேறு மதங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கின்றனர் என்பதற்கான சான்று உள்ளது. (01 புள்ளி)

(b) படப் பகுதியில் பிரதானமாக மழைநீரின் உதவியுடனேயே நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. (01 புள்ளி)

(c) படப் பகுதியானது, இலங்கையின் வரண்ட வலயத் தாழ்நிலத்துக்குரியது. (01 புள்ளி)

(vii) அருகிலுள்ள குறுக்குப் பக்கப் பார்வையினைக் கவனமாகப் பரிசீலித்து, படத்தில் காட்டப்பட்டுள்ள **X - Y** மற்றும் **P - Q** ஆகிய இரண்டு கோடுகளில் எந்தக் கோட்டிற்கேற்ப அது அமைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுக. (01 புள்ளி)




(viii) **B** என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள அமைவிடத்திற்குக் குறுக்காக விரிவடைந்து செல்லும் நெடுங்கோட்டினைச் சரியாகக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ஆ) உமக்கு தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக உலகப் புறவுருவப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலினைப் (பக்கம் 9) பயன்படுத்துக.

(i) **A, B** மற்றும் **C** என்ற எழுத்துக்களில், பவளப் பாறைகளைச் சேர்க்கையாகக் கொண்டுள்ள 'பெரிய தடுப்புப் பாறைத் தொடர்' எந்த எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ளது?

[பக். 6 ஐப் பார்க்க

(ii) **D, E** மற்றும் **F** என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மூன்று குடாநாடுகளில், 'கம்சட்கா' குடாநாட்டினைக் காட்டும் எழுத்து எது?

(iii) **G, H** மற்றும் **J** என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மூன்று நாடுகளில், இரும்பு மற்றும் உருக்கு உற்பத்திக்கு முக்கியத்துவம் பெற்ற 'பிறேசிலைக்' காட்டும் எழுத்து எது?

(iv) **K, L** மற்றும் **M** என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மூன்று நாடுகளில், ஆபிரிக்காவில் அதிகளவு குடித்தொகையைக் கொண்ட நாடான 'நைஜீரியாவைக்' காட்டும் எழுத்து எது?

(v) **P, Q** மற்றும் **R** என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மூன்று பிரதேசங்களில் மிகக் குறைந்த குடித்தொகைப் பரம்பலைக் கொண்ட பிரதேசத்தினைக் காட்டும் எழுத்து எது? (05 புள்ளிகள்)

(இ) உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கைப் புறவுருவப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலினைப் (பக்கம் 9) பயன்படுத்துக.

(i) **A, B** மற்றும் **C** என்ற எழுத்துக்களில், அண்மையில் அதிகளவில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட 'பொலன்னறுவை' மாவட்டத்தினைக் காட்டும் எழுத்து எது?

(ii) **D, E** மற்றும் **F** என்ற எழுத்துக்களில், இல்மனைற்று படிவு அமைந்துள்ள 'புல்மோட்டையைக்' காட்டும் எழுத்து எது?

(iii) **G, H** மற்றும் **J** என்ற எழுத்துக்களில், சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபல்யமான 'நிலாவெளி' கடற்கரையைக் காட்டும் எழுத்து எது?

(iv) **K, L** மற்றும் **M** என்ற எழுத்துக்களில், 'நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின்' அமைவிடத்தினைக் காட்டும் எழுத்து எது?

(v) **P, Q** மற்றும் **R** என்ற எழுத்துக்களில், 'வெலிகம மீன்பிடித் துறைமுகத்தின்' அமைவிடத்தினைக் காட்டும் எழுத்து எது? (05 புள்ளிகள்)

## பகுதி II


**2.** (i) வளிமண்டலச் சேர்க்கையின்படி, அதில் அதிகளவில் காணப்படும் **இரண்டு** வாயுக்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) வளிமண்டலத்தின் ஏனைய படைகளிடையே, மாறன் மண்டலம் மனிதனுக்கு ஏன் மிக முக்கியமானது என்பதற்கான **மூன்று** காரணங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) புவியில் நீர் எவ்வாறு பரம்பியுள்ளதென்பதைக் காட்டும் **மூன்று** வடிவங்களைக் குறிப்பிடுக.

(b) தற்போது நீரின் தரத்தில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சிக்குக் காரணமான **இரண்டு** மானிட நடவடிக்கைகளைச் சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

- தரப்பட்டுள்ள உலகப் படத்தினைப் பயன்படுத்தி **3** ஆம், **4** ஆம் வினாக்களுக்கு விடை தருக.




**3.** (i) மேலே உள்ள உலகப் படத்தில்,

(a) **A** என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள காட்டு வகையையும்

(b) **B** என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள காட்டு வகையையும்

ஒழுங்குமுறையில் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மனித இனத்துக்குக் காடுகள் ஏன் முக்கியமானது என்பதற்கான **மூன்று** காரணங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) தற்பொழுது, காடுகளினாலும் வன ஜீவராசிகளினாலும் எதிர்கொள்ளப்படும் **மூன்று** பிரச்சினைகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

[பக். 7 ஐப் பார்க்க


**4.** (i) மேலே உள்ள உலகப் படத்தில் முறையே **D** மற்றும் **E** என்பவற்றினால் காட்டப்பட்டுள்ள, வர்த்தக மட்டத்தில் நெல் பயிரிடப்படும் **இரண்டு** நாடுகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) (a) இத்தாலியில் நெற் பயிர்ச்செய்கைக்குப் புகழ்பெற்ற ஆற்றுப் பள்ளத்தாக்கினைப் பெயரிடுக.

(b) உலகின் நெற் பயிர்ச்செய்கையில் இனங்காணக்கூடிய அண்மைக்காலப் போக்குகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) அருகிலுள்ள படத்தில், இலங்கையில் நெல் பயிரிடப்படும் பிரதான பகுதிகள் காட்டப்பட்டுள்ளன. அவற்றில் முறையே இல. 1 மற்றும் இல. 2 என்பவற்றினால் காட்டப்படும் பிரதேசங்களை ஒழுங்குமுறையில் பெயரிடுக.

(b) உம்மால் பெயரிடப்பட்ட இரண்டு பிரதேசங்களில் **ஒரு** பிரதேசத்தினது நெற் பயிர்ச்செய்கையில் காணப்படும் முனைப்பான அம்சங்கள் பற்றிச் சுருக்கமான விவரணமொன்றைத் தருக. (05 புள்ளிகள்)




**5.** (i) இலத்திரனியல் கைத்தொழிலில் முன்னணியிலுள்ள **இரண்டு** ஆசிய நாடுகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) ஏனைய பரும்படியாக்கக் கைத்தொழில்களுடன் ஒப்பிடும் பொழுது இலத்திரனியல் கைத்தொழிலில் இனங்காணக்கூடிய **மூன்று** விசேடமான பண்புகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையின் இலத்திரனியற் கைத்தொழில் தொடர்பாக பின்வரும் தலைப்புகளின் கீழ் விவரிக்குக.
(a) கைத்தொழில் பரம்பிக் காணப்படும் பகுதிகள்
(b) கைத்தொழிலுடன் இணைந்து காணப்படும் **இரண்டு** பிரச்சினைகள்
(c) கைத்தொழிலுடன் இணைந்து காணப்படும் **இரண்டு** போக்குகள் (05 புள்ளிகள்)

**6.** (i) உலகின் குடித்தொகைப் பரம்பலினைப் பாதிக்கின்ற,
(a) பௌதிகக் காரணி **ஒன்றினையும்**
(b) மானிடக் காரணி **ஒன்றினையும்**
பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) உலகின் பிரதான குடித்தொகைச் செறிவு கொண்ட பிரதேசங்களில் காணக்கூடிய **மூன்று** விசேடமான பண்புகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் காணப்படும் குடித்தொகைச் செறிவுக்குப் பொறுப்பான **மூன்று** காரணிகளைக் குறிப்பிடுக.

(b) மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு மாவட்டங்களிலும் குடித்தொகைச் செறிவின் காரணமாக ஏற்பட்டுள்ள **இரண்டு** பிரச்சினைகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

**7.** (i) மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணைக் கணிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் **இரண்டு** தகுதி விதிகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் சுகாதாரத் துறையை விருத்தி செய்வதற்கு, கடந்த இரண்டு தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் **மூன்று** படிமுறைகளை விவரிக்குக. (03 புள்ளிகள்)

(iii) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை இலங்கையின் சமூக - பொருளாதார அபிவிருத்திக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை **மூன்று** காரணிகளின் உதவியுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

**8.** (i) பூகோள வெப்பநிலையில் அதிகரிப்பைத் தூண்டுகின்ற,
(a) மானிடக் நடவடிக்கை **ஒன்றினையும்**
(b) இயற்கைக் காரணி **ஒன்றினையும்**
குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மானிட நடவடிக்கைகளின் மீது காலநிலை மாற்றம் ஏற்படுத்தும் பாதகமான தாக்கங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) காலநிலை மாற்றத்தினை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் **மூன்று** நடவடிக்கைகளைச் சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

***

[பக். 8 ஐப் பார்க்க

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව/இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்/Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர) ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

විභාග අංකය / சுட்டெண் / Index Number ....................................

22381

(61) භූගෝල විද්‍යාව II
புவியியல் II
Geography II

| පරීක්ෂකවරයාගේ ප්‍රයෝජනය පිණිසයි. பரீட்சகரின் உபயோகத்துக்கு மட்டும் For Examiner's Use Only |
|---|

1. (අ) /(அ) /(a)

(i) ....................................................................................................

(ii) ....................................................................................................

(iii) ....................................................................................................

(iv) ....................................................................................................

(v) ....................................................................................................

(vi) (a) ....................................................................................................

(b) ....................................................................................................

(c) ....................................................................................................


(vii) ....................................................................................................

(viii) ....................................................................................................

10

[ பக். 9 ஐப் பார்க்க

(ආ) /(ஆ) /(b)




(i)

(ii)


(iii)

(iv)

(v)

/5

(ඉ) /(இ) /(c)




(i)

(ii)

(iii)

(iv)

(v)

/5

1. (අ) (அ) (a) $\overline{10}$ (ආ) (ஆ) (b) $\overline{5}$ (ඉ) (இ) (c) $\overline{5}$ = $\overline{20}$

සියලු ම හිමිකම් ඇවිරිණි ] முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus


NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

61 II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

භූගෝල විද්‍යාව II / புவியியல் II / Geography II




SCALE 1:50000